Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12



**பழைய பாடல்கள்**
**புதிய இசையில்..**

மனதுருக்கமுள்ளவர்

பால்ராஜ் கென்னடி




- காப்பார் உன்னை காப்பார்..
- தொல்லை கஷ்டங்கள்..
- ஆதாரம் நீர்தானய்யா..
- சோர்ந்து போகாதே..
- பாடுவேன் பரவசமாகுவேன்..

ஜெப தேவைக்கும்
தேவ ஆலோசனைக்கும்



+ 91 - 44 - 22353500 + 91 - 9940667881
www.kennedyministries.org
E-mail: nijakennedy@yahoo.com

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

VOL . 5 ISSUE . 11
தனிப்பிரதி ரூ 20/= ஜூன் 2012

# ஒளி எக்காளம்



## இளைப்பாறுதல் தரும் தேவன்

# இளைப்பாறுதல் தரும் தேவன்

**நிஜா கென்னடி**

**வ**ருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்; நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் (மத்தேயு 11:28-30).

சுமக்க முடியாத கடினமான பாரச் சுமைகளினாலும், பல பொறுப்புகளையுடையதினாலும், கடின வேலையினாலும், அடிமைத்தனத்தினாலும் மனக் கவலையோடு இருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள். இயேசு கிறிஸ்துவிடமிருந்து மட்டும்தான் இளைப்பாறுதல் கிடைக்கும். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை தியானித்து, அவரிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு வாழ்வது கடினமானதென்று அநேகர் நினைக்கிறார்கள்.

பாவம் செய்ததினால் மனசாட்சி குத்தப்பட்டு பாரத்தோடிருக்கிறீர்களா? இந்த பாரங்களிலிருந்து இயேசு கிறிஸ்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார். நாம் அவரை சார்ந்திருக்கும்போது, அவரிடமிருந்து இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளலாம். அவரது அன்பால் நம்மை நிரப்பி, நம் மனக்காயங்களை ஆற்றுவார். சமாதானத்தை தருவார். தேவனோடுகூட ஐக்கியமாய் இருக்கும் போது சோர்வுகள் நம்மைவிட்டு அகலும்.

வாழ்க்கையில் சிக்கல்களோடு இருக்கிறீர்களா? உங்களுக்குள்ள உரிமையை கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்களா? உங்களுடைய சுதந்திரத்தையும் உரிமையையும் வழங்காது ஒடுக்குகிறார்களா? இரக்கமற்ற மற்றும் நேர்மையற்ற முறையில் நடத்துகிறார்களா? நியாயமற்ற முறையில் நடந்து, வேண்டுமென்றே அலைக்களிக்கிறார்களா? சுமப்பதற்கு அரிதான பார சுமைகளை நீங்கள் கைக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்களா? துன்பப்படுத்துகிறார்களா? இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள். அவர் உங்கள் மனப் பாரங்களிலிருந்து, சோர்வுகளிலிருந்து, துக்கத்திலிருந்து, அடிமைத்தனத்திலிருந்து, அலைக்களிப்புகளிலிருந்து விடுவிக்கிறவராயிருக்கிறார். அவர் உங்கள் வேதனையை, மனக் கவலையை, பயத்தை நீக்கிப்போட்டு மனநிம்மதியோடு மகிழ்ச்சியோடு இருக்கச் செய்வார்.

பாவம் செய்து பாவபாரத்தோடிருக்கிறீர்களா? பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வரமுடியாதபடி சிக்கித் தவிக்கிறீர்களா? இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள். உங்களை பாவத்திலிருந்து மீட்டு எடுத்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார். நாம் செய்த பாவங்களுக்காக அவர் சிலுவையில் இரத்தத்தை சிந்தினார். நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து அவரிடம் மன்னிப்பை பெற்றுக் கொள்ளும்போது தம்முடைய இரத்தத்தினால் நம் பாவங்களை கழுவி சுத்திகரித்து நம்மை பரிசுத்தப்படுத்திவிடுகிறார். எப்பேர்ப்பட்ட பாவத்தையும் அவர் மன்னித்து மறந்து விடுகிறார். பாவ பாரத்தை நீக்கி போட்டு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தருகிறார். நோயின் பிடியினால் வேதனையோடு இருக்கிறீர்களா? அவர் உங்கள் பாடுகள், துக்கங்கள், நோய்கள் பெலவீனங்கள் ஆகியவற்றை சிலுவையில் சுமந்து தீர்த்தார். அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார்.

சிலர் தங்களுக்கு தாங்களே பாரஞ்சுமக்கிறார்கள். இது எதனால் வருகிறது என்றால், பணத்தை நம்புவதால். பணம் நமக்கு உதவும். ஆனால், பணம் நமக்கு சுகத்தையோ, பாதுகாப்பையோ, சமாதானத்தையோ தராது. சிலர் பணத்தின்மீது தங்களது நம்பிக்கையை வைத்திருப்பார்கள். பணத்தின்மீதே கவனமாயிருப்பார்கள். எப்பொழுதும் பணத்தைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். தாங்கள் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும் பணத்தின் அடிப்படையிலேயே சிந்திப்பார்கள். ஒருவரை சந்திக்க செல்ல வேண்டியிருந்தாலும் அல்லது ஒருவர் தங்களை சந்திக்க வருவதாக இருந்தாலும், அந்த காரியத்தினால் பணத்திற்கு இழப்பு வந்துவிடுமோ என்று கணக்கிடுவார்கள். குடும்பத்தின் தேவைக்கு ஒரு பொருள் வாங்க வேண்டுமென்றாலும், பணம் போய் விடுமே என்றுதான் எண்ணுவார்கள். குடும்பத்தின் அடிப்படை சௌகரியங்களைக்கூட பணத்திற்காக தியாகம் செய்து விடுவார்கள். தாங்கள் நன்றாக இருக்க வேண்டும் மற்றும் தனது குடும்பத்திலுள்ளவர்கள் நன்றாக இருக்கவேண்டும் என்று எண்ணமாட்டார்கள். நாளைய வாழ்க்கைக்கு பணம் தேவை என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். இன்றைக்கு வேண்டிய உணவு, உடையைப் பற்றி எண்ணமாட்டார்கள். பணம் செலவழிக்காமல் இருந்தால், அது அவர்களுக்கு சந்தோஷமாய் இருக்கும். பணம் குறையக்கூடாது என்பதே அவர்களது நோக்கமாயிருக்கும். பணம் தான் அவர்களுக்கு அரண், கோட்டை, பெலன்.

சிலர் கஞ்சத்தனம் பண்ணி பணம் குறையாமல் பார்த்துக் கொள்வார்கள். நல்ல தரமான பொருட்களை வாங்க மாட்டார்கள். பொருட்களுடைய விலையின் நிமித்தம் மலிவான பொருட்களை வாங்குவார்கள். சில பொருட்களை வாங்குவதை தள்ளிப்போட்டுக் கொண்டே போவார்கள். தாங்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, பணம் செலவழிந்து விடக்கூடாது என்பதில் கவனமாயிருப்பார்கள். விருந்தினர் வீட்டுக்கு வருவதை சுமையாக நினைப்பார்கள். இவர்கள் பணமாகவும், தங்கமாகவும் சேர்த்து வைப்பார்கள். சுகவீனம் வந்தால் தங்கள் கைவசமிருக்கும் மாத்திரை மருந்துகளினாலே சமாளிக்கப் பார்ப்பார்கள். டாக்டரிடம் போனால் பணம் போய்விடுமே என்று கவலைப் படுவார்கள். தங்களது சுகத்தைக் காட்டிலும் பணத்தை பெரிதாக பார்ப்பார்கள். இப்படிப்பட்ட மனிதர்களுக்கு பணம்தான் நுகத்தடி. இவர்கள் பணம் உதவும் என்றும், நிம்மதி தரும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்த பணம்தான் அவர்களுக்கு பாரமே. இவர்களுக்கு தேவையான சுகம், நிம்மதி,

சமாதானத்தை இயேசுகிறிஸ்து மாத்திரமே தரமுடியும்.

என் நுகத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். நுகம் என்பது, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க நம்மை பழக்கப்படுத்திக் கொள்வது. இரண்டு மாடுகள் ஒன்றிணைந்து, சுமைகளை இழுத்துச் செல்ல ஏதுவாக, அவைகளின் கழுத்துகளின்மேல், பொருத்தப்படும் நீண்ட மரக்கழியே நுகத்தடியாகும். நாம் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்கும்போது, நமக்கு மனநிம்மதியைக் கொடுத்து, ஆறுதலைத் தருகிறார். அவருடைய நுகம் நடைமுறை வாழ்க்கைக்கு பயனுள்ளது. நம் மனக்கவலையை மாற்றி நம்மை ஆற்றித் தேற்றுகிறார். கர்த்தர் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், கடினமில்லாதவர். வார்த்தையின்படி நடக்க நம்மை பலவந்தப்படுத்தமாட்டார். நாமாகவே இயேசு கிறிஸ்துவை பின்பற்றி வாழ கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய வழிகாட்டுதலின்படி நாம் வாழும்போது ஒழுக்கமுள்ளவர்களாகவும், தாழ்மையுள்ளவர்களாகவும், கட்டுப்பாடுகளுள்ளவர்களாகவும் வாழ்வோம்.

**வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்லவழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களோ நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்** (எரேமியா 6:16). நாம் வேதத்தை வாசித்து அதன்படி நடக்க கவனமாயிருக்க வேண்டும். கர்த்தர் நம்மிடம் அதையே எதிர்பார்க்கிறார். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாகும்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்ல (மத்தேயு 11:29,30). நாம் வேதத்தின்படி நடக்கவில்லையென்றால் இளைப்பாறுதலில்லாமல் இருப்போம். அநேகர் தேவன் காட்டும் வழியில் செல்ல மறுத்து அவர்கள் விரும்பும் வழியிலேயே செல்கிறார்கள். நாம் தேவனுடைய வழியில் நடக்கும்போது தான் நமக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

அநேகர் தங்கள் வாழ்க்கையில் கர்த்தரை மறந்து மாயையான உலகத்திற்கு பின்னாக சென்று கொண்டிருக்கிறார்கள். தேவனை விட்டு விலகி உலக பொருட்களுக்காக, பணம், பதவி, செல்வாக்கு புகழுக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய இடத்தில் பணத்தையும், வேலையையும் பொருட்களையும் வைத்திருக்கிறார்கள். தேவனுக்கு அவர்களுடைய வாழ்க்கையில் இடமேயில்லை. இவையெல்லாம் நிலையில்லாதது. **என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்து விட்டார்கள்** (எரேமியா 2:32). உலகத்தை நேசித்து, உலகத்தின் கவர்ச்சிக்கு பின்னே செல்கிறார்கள். அநேகர் கர்த்தருடைய அன்பையும், அவர்கள் வாழ்க்கையில் கர்த்தர் செய்த நன்மைகளையும், அவருடைய வழிநடத்துதலையும், அவருடைய பாதுகாப்பையும், அவரை சார்ந்து இருப்பதையும் கர்த்தரையே மறந்து விடுகிறார்கள்.

**இயேசு அவர்களை நோக்கி, ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்** (யோவான் 6:35). நாம் உள்ளார்ந்த மனிதனில் வளரவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறிச் செல்லவும் இயேசு கிறிஸ்துவோடுகூட சரியான உறவு வைத்திருக்க வேண்டும்.

நாம் இயேசு கிறிஸ்துவை பின்பற்ற வேண்டுமானால், நாம் செய்த பாவங்களை உணர்ந்து அவற்றை அறிக்கையிட்டு, பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும். மனந்திரும்பியவர்கள் தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்



டும் (அப்போஸ்தலர் 2:38). பின்னர், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளவேண்டும். தேவபிரசன்னத்தால் நாம் நிரம்பியிருக்கும்போது, அவருடைய பாதுகாப்பு நமக்கு இருக்கும்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது, தன் விருப்பத்தின்படி ஒன்றும் செய்யவில்லை. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலேயே நோக்கமாயிருந்தார். நாம் உண்மையாகவே இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக இருந்தோமானால், அவரைப்போல பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் நோக்கமாயிருப்போம். மற்ற மனிதர்களுடைய விருப்பதின்படியோ, நம் சுய விருப்பத்தின்படியோ நடக்கமாட்டோம்.

**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்** (நீதிமொழிகள் 3:5,6).

அநேகர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்கள் சுயவிருப்பத்தின்படி நடப்பதால், மனநிம்மதியில்லாமல், சமாதானத்தை இழந்து, வேதனையோடு துக்கத்தோடு இருப்பார்கள். நாம் கர்த்தரை சார்ந்து, அவருடைய வழியில் நடக்கும் போது, இளைப்பாறுதலை பெற்றுக் கொள்ளலாம்.



**கர்த்தருடைய வழியில் சென்ற மோசே**

மோசே, கர்த்தரை முழுமையாக சார்ந்துகொண்டு அவருடைய வழிநடத்துதலுக்காக காத்திருந்தான். உம்முடைய சமூகம் எங்களோடுகூட வரவில்லை என்றால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும் என்று கர்த்தரிடம் சொல்லுகிறான்.

**உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்தானால், நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான். அதற்கு அவர்: என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்** (யாத்திராகமம் 33:13,14). இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானான் தேசத்திற்கு வழிநடத்திச் செல்ல மோசேயைக் கர்த்தர் தெரிந்தெடுத்தார். அவனைக் கர்த்தர் சீனாய் மலைக்கு வரவழைத்து, பத்து கற்பனைகளைக் கொடுத்தார். மோசே மலையிலிருந்து வரத்தாமதித்தபோது, ஜனங்கள் ஆரோனிடம் எங்களை வழிநடத்திச் செல்ல தெய்வத்தை உருவாக்கும் என்றார்கள். ஆரோன் ஜனங்களிடம் நகையை கொண்டு வரச் சொல்லி, அதைவைத்து ஒரு கன்றுகுட்டியை வார்ப்பித்தான். ஜனங்கள்

தங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்த கர்த்தரை மறந்து போனார்கள். அவர்களே கைகளினால் விக்கிரகத்தை உண்டு பண்ணி அதை வணங்கினார்கள். கர்த்தர்தான் மனிதனை உண்டாக்கினார். தங்களை உண்டாக்கின கர்த்தரை வணங்காமல், கையினால் உருவாக்கிய விக்கிரகத்தை வணங்கினார்கள். கையினால் உருவாக்கிய விக்கிரகம் தெய்வமாக முடியாது. தேவனுடைய இடத்தில் பணம், பொருட்கள், பதவி, புகழ், மனிதர்களை வைத்திருப்பதும், விக்கிரகங்களை வணங்குவதற்கு சமம். **என்னையன்றி உனக்கு வேறேதேவர் கள் உண்டாயிருக்க வேண்டாம், ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்** (யாத்திராகமம் 20:3,4). சிலைகளை வணங்குவது பாவம். இதைத் கர்த்தர் வெறுக்கிறார். இதனால் இஸ்ரவேல் ஜனங்கள்மேல் கர்த்தர் கோபமானார். மோசே ஜனங்களுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசுகிறான். இந்த ஜனங்கள் உம்முடையவர்கள் என்பதை நினைத் தருளும் என்று ஜெபிக்கிறான்.

ஒரு சிநேகிதனுடன் பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார். மோசே கர்த்தரை அறிந்து கொள்ள விரும்புகிறான். உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைத்த தானால் உம்முடைய வழியை எனக்கு அறிவியும் என்று கேட்கிறான். கர்த்தர் நான் உன்னோடுகூட இருந்து உன்னை வழிநடத்துவேன் என்றார். கர்த்தர் தாமே மோசேயை அடக்கம் பண்ணினார். எப்பேர்ப்பட்ட சிலாக்கியம் இது. கர்த்தருடைய வழியில் மோசே நடந்ததின் பலன் இது.

எகிப்திலிருந்து கிளம்பிச் சென்ற ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், முறுமுறுத்து, அவிசுவாசமான வார்த்தைகளை பேசி முரட்டாட்டம் பண்ணினார்கள். கர்த்தருடைய சித்தத்தை செய்யாமல் அதற்கு எதிராக போராடினார்கள். கர்த்தர், வழியே இல்லாத இடத்தில் செங்கடலை பிளந்து வழியை உண்டாக்கி கொடுத்தார். ஜனங்களை மன்னாவினால் போஷித்தார். பகலிலே மேக ஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பமாகவும் கர்த்தர் அவர் களோடுகூட பாதுகாப்பாக இருந்தார். பல அற்புதங்களை கர்த்தர் செய்திருந்தும் அவர்கள் நன்றியறியாதவர்களாக, கடின இருதயத்தோடு இருந்தனர். அதனால் இளைப்பாறுதலின் தேசமாகிய கானானுக்குள் யோசுவாவையும், காலேபையும் தவிர யாரும் பிரவேசிக்க முடியவில்லை. வழியிலேயே மடிந்து போனார்கள். அவர்கள் சந்ததியினரே அதற்குள் பிரவேசித்தார்கள்.

கடின இருதயமுள்ளவர்கள், மற்றவர்கள் விரும்புவதை செய்யமாட்டார்கள். தனது திட்டங்களை மாற்றிக்கொள்ள மறுப்பார்கள். அவர்கள் மனது விரும்பும் வழியில் செல்வார்கள். தேவனை நோக்கி பார்க்கவும், அவருடைய வழியில் செல்லவும் மறுப்பார்கள். தேவனுடைய சித்தத்தை அறிந்தும் அதை முக்கியமற்றதாக நினைத்து அசட்டை செய்வார்கள். கர்த்தருடைய சித்தத்தை செய்யாமல், தொடர்ந்து அதற்கு எதிராக செயல்படுவார்கள். அதனால் கர்த்தரும் அவர்களை அசட்டை செய்து கீழே விழும்படி செய்வார்.

கர்த்தர் நம்மை ஆளுகை செய்யும் படியாக, நம்மை தாழ்த்தி முழுவதுமாக அவருக்கு ஒப்புகொடுக்க வேண்டும். இருதயத்தை கடினப்படுத்தாமல், பாவத்தின் கவர்ச்சிகளுக்கும், தேவனை விட்டு விலக்குகிற எந்த காரியங்களுக்கும் விலக்கி நம்மை காத்துக் கொள்ள வேண்டும். சுயவிருப்பம்போல் நடக்கும் போது, வேதனைகள், பாடுகள் வரும். இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும் போது, இளைப்பாறுதலில்லாமல் நரகத்தில் வேதனை அனுபவிக்க வேண்டும். இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய வழியில் தொடர்ந்து நிலைத் திருப்பவர்கள், இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும்போது, பரலோகத்திற்கு சென்று இளைப்பாறுதலடைவார்கள்.

நாம் செய்கிற எல்லா காரியத்திலும், கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதையே நாம் செய்ய வேண்டும். அப்பொழுது கர்த்தர், நாம் அந்த காரியத்தை செய்வதற்கு உதவியாயிருப்பார். கர்த்தரை முழுமையாக நம்பாமல், நம் சொந்த அறிவை சார்ந்து காரியங்களை செய்யும்போது, பல துன்பங்கள், பாடுகள், வேதனைகள், அவமானம் வரும். கர்த்தர் நமக்கு உதவி செய்ய முடியாது.

கர்த்தரோடு ஐக்கியமாய் இருந்து, அவரைச் சார்ந்து, அவரை ஆதாரமாக வைத்து, அவர்மேல் பாரங்களை வைத்து விட்டு, அவரிடமிருந்து இளைப்பாறுதலை பெற்றுக் கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது, அவரையே சார்ந்து, அவருடைய சித்தத்தின்படி முடிவுகளை எடுக்க வேண்டும். நமக்கு எது நல்லது என்பதை கர்த்தரே அறிவார். நாசியிலே சுவாசமுள்ள எந்த மனிதனையும் நம்பாதே என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. மனிதர்கள் மாறிப்போவார்கள். மனிதனை நம்புகிறவன் சபிக்கப்பட்டவன் (எரேமியா 17:5). நம்மைவிட கர்த்தரே நம்மை நன்கு அறிந்து வைத்திருக்கிறார். நாம் செய்யும் எல்லாவற்றிலும் முழுவதுமாக கர்த்தரை நம்பி இருக்கவேண்டும். நம் சொந்த எண்ணங்களையும், மற்றவர்களின் கருத்துக்களையும் நம்பாமல், விட்டுவிட வேண்டும். நம்முடைய பார்வையில் நாம் செய்வது நமக்கு சரியாக தோன்றலாம். ஆனால், கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதன்படி நடக்க நாம் முன்வரவேண்டும்.

வார்த்தையின்படி நடக்காதிருந்தோமென்றால், நம்மை தாழ்த்தி, கர்த்தரிடம் மன்னிப்பை பெற்றுக் கொண்டு நம்மை சரிசெய்து கொள்ளவேண்டும். உண்மையான தேவ மனிதர்களிடமிருந்து நமக்கு ஆலோசனை வந்தால் அதை அசட்டை பண்ணாமல் அதற்கு கீழ்ப்படிந்து நம்மை திருத்திக் கொள்ளவேண்டும். முக்கியமான முடிவுகளை எடுக்கும்முன் அவைகளை தேவனிடத்தில் ஜெபத்தில் கொண்டுவர வேண்டும். வேதத்தை வழிகாட்டியாக பயன்படுத்த வேண்டும். கர்த்தர் வேத வார்த்தையின் மூலமாக பேசுவார். அதையே பின்பற்ற வேண்டும். கர்த்தரே உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து பாதுகாத்து நடத்துவார்.

தேவனுடைய வழிநடத்துதலை பெற்றுக் கொள்ள, நம்முடைய வழிகளிலெல்லாம் கர்த்தர் நம்மோடு இருப்பதை உணரவேண்டும். வார்த்தையை படித்து, பரிசுத்த ஆவியானவருக்கு செவிகொடுக்க வேண்டும். நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும், இயேசுவை முன்பாக வைத்திருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில், எந்த பகுதியில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து துன்பத்தோடிருக்கிறோம்? எதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம் இயேசு கிறிஸ்துவுக்கா அல்லது உலகப்பொருட்களுக்கா?

### பொருளாசையினால் வழிவிலகிய பிலேயாம்

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தின் எல்லையில் இருந்தார்கள். அவர்கள் யோர்தானுக்கருகில் பாளயமிறங்கினார்கள். இஸ்ரவேலர் ஏமோரியரை முறியடித்து, அவர்களுடைய எல்லா பட்டணங்களையும் பிடித்துக் கொண்டார்கள். இதை அறிந்த மோவாபின் ராஜாவாகிய பாலாக் மிகவும் பயந்தான். மோவாப் தேசத்தின் எல்லையில் இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியால், தன் படை பலத்தால் அவர்களை முறியடிக்க முடியாது என்று நினைத்தான். அதனால் பிலேயாம் என்கிற தீர்க்கத்தரிசியை

இஸ்ரவேல் ஜனங்களை சபிப்பதற்காக அவனுக்கு கூலி பேசி, தன் தேசத்து மூப்பர்களை பெத்தூரிலுள்ள பிலேயாமிடத்தில் அனுப்பினான். கர்த்தர் பிலேயாமிடம் அந்த ஜனங்களை சபிக்க வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று சொன்னார். அதினால் கர்த்தர் எனக்கு அனுமதி கொடுக்கவில்லை என்று அவர்களை திருப்பி அனுப்பிவிட்டான். பாலாக் **மறுபடியும் மூப்பர்களை அனுப்பி, உம்மை மிகவும் கனம் பண்ணுவேன்; நீர் வந்து எனக்காக அந்த ஜனங்களைச் சபிக்க வேண்டும் என்று சொல்லி அவர்களை அனுப்பினான் (எண்ணாகமம் 22:17).** பிலேயாம் அவர்களிடம் வெள்ளியும் பொன்னும் தன் வீடு நிறைய தந்தாலும் என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது என்று சொல்லிவிட்டு, மறுபடியும் கர்த்தரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னான். கர்த்தரின் மனதை மாற்றி, போவதற்கு கர்த்தரின் அனுமதி வர எதிர்பார்த்திருந்தான். கர்த்தர் நீ அவர்களோடு கூடப்போ; ஆனாலும், நான் உனக்கு சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார்.

கர்த்தரோ அவனை போகக்கூடாது என்று சொன்னார். அவனோ பணத்தின்மேல், பொருட்கள்மேல் ஆசைப்பட்டு சுயவழியில் போவதற்கு விரும்புகிறான். தேவன் நம்மை ஒருபோதும் வற்புறுத்தமாட்டார். நாமாகத்தான் நல்ல வழியை தெரிந்து கொள்ள வேண்டும். பிலேயாம் தேவனுடைய சித்தத்தை அறிந்தும் தன் சுயசித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறான். நம்மில் அநேகர் இப்படியாகத்தான் இருக்கிறோம். நம் சித்தத்தையே தேவன் நிறைவேற்ற விரும்பி மறுபடியும் அவரிடம் விசாரிக்கிறோம்.

பிலேயாம் அவர்களோடுகூட போனதினாலே தேவனுக்கு கோபம் மூண்டது. நம்முடைய பார்வைக்கு சில வழிகளை சரியானது என்று எண்ணி, அந்த வழியில் செல்கிறோம். பிலேயாமுக்குள் பணம், பொருட்கள்மேல் ஆசை இருந்தது. நாம் குறுக்கு வழியில் முன்னேற நினைப்பது, பணத்தை சேர்ப்பது தவறான வழி. உழைக்காமல் பணத்தை சேர்ப்பதும், சுயநலத்தோடு பிறருடைய பொருட்கள் மேலும், பணத்தின்மேலும் அதிகமாக ஆசை கொள்வது தவறு. பொருளாசையுடையவன் ஏமாற்றுக்காரனாயிருக்கிறான்.



கர்த்தருடைய தூதன் உருவிய பட்டயத்தோடு நிற்பதை பிலேயாம் கண்டான். **கர்த்தருடைய தூதனானவன் அவனிடம் உன்வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாக புறப்பட்டு வந்தேன் என்றான்** (எண்ணாகமம் 22:32). கர்த்தருக்கு முன்பாக அவனது போக்கு சரியில்லாதிருந்தது. அவன் தேவனுக்கு கீழ்ப்படியாமல், இருதயத்தில் பண ஆசையினால் நிறைந்து துணிகரமாக செல்கிறான். தேவனுடைய வழியில் செல்லாததினால் நேரக்கூடிய ஆபத்தான பின் விளைவுகளைப்பற்றி எண்ணாமல் செயல்பட்டான். நாமும் தேவனுடைய சித்தத்தை அறிந்தும், அதற்கு கீழ்ப்படியாமல், தேவனுக்கு எதிராக காரியங்களை செய்யும்போது தேவன் நம்மை தடுக்கமாட்டார். நாம் விரும்புவதையே செய்யும்படி விட்டுவிடுவார்.



பிலேயாம் பாலாக்கிடம் வந்து கர்த்தர் சொல்வதையே சொல்வேன் என்றான். பாலாக், நகரத்தின் மேடுகளுக்கு பிலேயாமை அழைத்துச் சென்று இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து அவர்களை சபிக்கும்படியாக சொன்னான். ஆனால், கர்த்தர் பிலேயாமின் வாயில், இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் என்று ஆசீர்வாதமான வார்த்தைகளைக் கூறச் செய்தார்.

ஆனால், பிலேயாம் கூலிக்காக ஆசைப்பட்டு, கர்த்தரை விட்டு பின் வாங்கிப்போய், இஸ்ரவேல் ஜனங்களை பாவத்துக்கு நேராக வழிநடத்த பாலாக்குக்கு ஆலோசனை சொன்னான். மோவாப் தேசத்திலிருந்த மீதியானிய பெண்களோடு இஸ்ரவேலர் விபச்சாரம் செய்தனர். அவர்களுடைய தெய்வங்களை வணங்கி, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதை உண்டனர் (வெளி 2:14). பிலேயாம் இருதயத்தில் பேராசை கொண்டு இஸ்ரவேல் மக்களை பாவ வலையில் சிக்கும்படியாக வைத்தான். தேவனுக்கு எதிராக ஜனங்களை பாவம் செய்ய வைத்து, தேவனுடைய தண்டனை அவர்கள் மேல் வரச் செய்வதே அவனுடைய திட்டம். ஜனங்கள் பாவம் செய்ததினால், தேவ கோபம் அவர்கள்மேல் வந்தது. ஜனங்களில் இருபத்திநாலாயிரம்பேர் செத்துப் போனார்கள்.

கர்த்தருடைய கட்டளையின்படி மீதியானியருக்கு எதிராக இஸ்ரவேலர் யுத்தம் பண்ணினார்கள். அவர்கள் மீதியானியரை முறியடித்தபோது பிலேயாமையும் கொன்று போட்டார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் பண ஆசை கொண்டு, தேவஜனங்களை பாவத்தில் விழவைத்த பிலேயாமின் முடிவு மரணம். பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும் (நீதிமொழிகள் 1:19). மனுஷனுக்குச் செம்மையாகத் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதிமொழிகள் 14:12).

கர்த்தர் சொல்லும் வழியில் நடப்போம், இந்த உலகத்தில் இளைப்பாறுதலை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வோம். பரலோகத்தின் இளைப்பாறுதலையும் பெற்றுக் கொள்வோம். கர்த்தருடைய கிருபை உங்களோடு இருப்பதாக!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

# கர்த்தர் யாரிடம் எப்படி பேசுவார்? 3

**பால்ராஜ் கென்னடி**

பரிசுத்த வேதாகமம், கர்த்தருடைய பொதுவான சித்தத்தை வெளிப்படுத்துவதாகும். கர்த்தருக்குப் பிரியமானது எது? பிரியமில்லாதது எது? ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக்கூடாது? கணவன், மனைவி, குடும்பம், பிள்ளைகள், வேலை, உலகம், பரலோகம் இவைகளைப் பற்றி கர்த்தருடைய சித்தத்தை நாம் வேதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆபிரகாம், மோசே, யோசேப்பு, தானியேல், அன்னாள், எஸ்தர், யாக்கோபு, யோபு இப்படிப்பட்ட தேவ மனுஷர்களின் வாழ்க்கையிலிருந்தும் கர்த்தருடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கான கர்த்தருடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவரின் உதவியின்றி நாமாகத் தெரிந்து கொள்ள முடியாது. வேதத்தின் வார்த்தைக்குள்தான் அந்த குறிப்பிட்ட காரியத்திற்கான கர்த்தருடைய சித்தம் மறைந்துள்ளது. அதை பரிசுத்த ஆவியானவரே வெளிப்படுத்த முடியும்.

வேதத்தின் வார்த்தையை, எழுதப்பட்ட வார்த்தை, ஜீவ வார்த்தை, பேசுகின்ற வார்த்தை என மூன்றாக விவரித்துச் சொல்லலாம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் *4:12*). இது எழுதப்பட்ட வார்த்தையாகும். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும், தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (*1 கொரிந்தியர் 2:11-13*).

தேவ ஆவியினால் எழுதப்பட்ட வார்த்தைகளை (*2 தீமோத்தேயு 3:16*). தேவனுடைய பரிசுத்த ஆவியானவரே நமக்கு விளக்கி சொல்லித் தரமுடியும். நம் வாழ்க்கையில் நடக்கும் எல்லாக் காரியங்களுமே வேதத்தில் உள்ளது. வேலை, திருமணம், ஊழியம், கொடுக்கல், வாங்கல், படிப்பு மற்றும் எந்தக் குறிப்பிட்டக் காரியமும் வேதத்தின் எழுதப்பட்ட வார்த்தைக்குள் மறைந்திருக்கிறது. அதை பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே வெளிப்படுத்த முடியும். பொதுவான தேவ சித்தத்தை, குறிப்பிட்ட தேவ சித்தமாகச் சொல்லிவிடக்கூடாது. உதாரணமாக உங்களது மகன் அல்லது மகள், பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்க விருப்பப்படுகிறார்கள். அதற்கான சேர்க்கை வரும்போது, எந்த பிரிவு, எந்த கல்லூரியில் வேண்டும் என்பதை சொல்ல வேண்டும். இந்த குறிப்பிட்ட காரியத்தில் நீங்கள், தேவ சித்தத்தை அறிந்து, அதின்படி செய்ய விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். வேதத்தில் எந்த பிரிவு, எந்த கல்லூரியில் என்பது எங்கே உள்ளது? இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று எண்ணாகமம் *24:1*-ல் சொல்லப்பட்டுள்ளது என்று பொதுவான தேவ சித்தத்தை சொன்னால், நம்மிடம் கேட்பவர்களுக்கு என்ன புரியும்? நாமாக ஏதோ ஒரு பிரிவையும், கல்லூரியையும் தெரிவு செய்தாலோ அல்லது மகனுக்கு / மகளுக்கு பிரியமானதை தெரிவு செய்தாலோ, அது கர்த்தருடைய சித்தம்தானா என்பதை எப்படி தெரிந்து கொள்வது? பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசினால்தான் நாம் குறிப்பாக தேவ சித்தத்தை (அந்த குறிப்பிட்ட காரியத்திற்கு) தெரிந்து கொள்ள முடியும்.

மற்றொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு சகோதரி என்னிடம் ஜெபிக்க வந்திருந்தார்கள். அவர்களது கணவனுடன் அவர்களால் வாழமுடியாத சூழ்நிலை. அடி, உதை, கொலை செய்யவும் தயங்காத கணவன். அவரோடு இருக்கும் ஒவ்வொரு நாளும் மரண பயத்தோடு இருக்கவேண்டிய சூழ்நிலை. அந்த சகோதரி தேவ சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டும். வேதம், விவாகரத்து கூடாது என்று சொல்கிறது. இவரோ சேர்ந்து வாழமுடியாத சூழ்நிலை. இப்போது வேதத்தின் பொதுவான தேவசித்தம் (விவாக ரத்து கூடாது) நிறைவேற வேண்டும். அதே நேரத்தில் இந்த குறிப்பிட்ட சூழ்நிலைக்கான குறிப்பான தேவ சித்தம் தெரிந்து, அதின்படி நடக்க வேண்டும். இந்த சமயத்தில் நாமாக நமது சொந்த அறிவு, அனுபவங்களை, மற்றவர்களிடம் கேட்டு அறிந்தவைகளை வைத்து இதுதான் கர்த்தர் சித்தம் என்று சொல்லிவிடக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசவேண்டும். இது அவர்களுடைய வாழ்க்கை. விளையாட்டு அல்ல. எதையோ ஒன்றை யோசித்தோ, கற்பனை செய்தோ சொல்லிவிடக்கூடாது. கர்த்தர் பேசுவார். அதற்கு தியானம், தகுதி வேண்டும்.

எல்லோரிடமும் கர்த்தர் பேசுவார். ஆனால், அதற்கு என்று வழி உள்ளது. வேதத்தை இரவும் பகலும், தியானிக்க வேண்டும். பொதுவான தேவ சித்தத்தை அறிய வேண்டும்.

அதற்கடுத்து, இந்த பொதுவான சித்தத்தோடு நின்றுவிடாமல், ஜெபத்தில், பரிசுத்த ஆவியானவர் இவற்றையெல்லாம் நம்மோடு விரிவாகப் பேசக் காத்திருக்க வேண்டும். இதுவே தியானம் ஆகும். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அவசியம். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கக்கூடிய (பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலை) அனுபவம் கிடைக்காது. வேத வார்த்தை இல்லாமல் பரிசுத்த ஆவியானவர் பேசமாட்டார். வேதத்தின் வார்த்தை மிக மிக முக்கியம். தம்மையே வார்த்தை என்று கர்த்தர் குறிப்பிடுகிறார் (யோவான் 1:1,14, 1 யோவான் 1:1). அவரை ஜீவ வார்த்தை என்று குறிப்பிடுகிறார். வேதத்தின் வார்த்தைக்கு புறம்பாக ஒன்றும் பேசமாட்டார். அவரையும் வார்த்தையையும் பிரிக்க முடியாது. வெறும் அபிஷேகம் மட்டும் கர்த்தருடைய சத்தத்தை கேட்க போதுமானதல்ல. வேத வார்த்தையை தியானித்தலும், பரிசுத்த ஆவியானவரின் அளவற்ற அபிஷேகமும் மிக மிக அவசியம்.

## *கர்த்தர், சொன்னதை செய்தார்*


தீப்தி ஜெனிஃபர்

எனது மகளின் பெயர் தீப்தி ஜெனிஃபர். அவள் சென்னையிலுள்ள ஒரு பிரபலமான மருத்துவக் கல்லூரியில் பிஸியோதெரபி (B.P.T) பிரிவில் படித்து வந்தாள். அவள் படிக்கமுடியாதபடி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. எனது கணவரும், நானும், அவள் படிக்க வேண்டுமென்பதில் ஆர்வமாய் இருந்தோம். அவளுக்கோ படிக்க முடியாதபடி சூழ்நிலை. அவளுடைய வற்புறுத்தலின்பேரில், அந்தக் கல்லூரியிலிருந்து அவளை அழைத்து வந்துவிட்டோம்.

அப்போது சகோதரரிடம் ஜெபிக்க சென்றோம். சகோதரர், கர்த்தர் எனது மகளை ஒரு பிஸியோதெரபிஸ்ட்டாக, அந்த சீருடையில் காண்பிப்பதாக ஒரு தரிசனத்தைச் சொன்னார். அந்த நேரத்தில் எங்களுக்கு அதை நம்பமுடியவில்லை. ஏனென்றால், எனது மகளின் படிப்பு முடிந்துபோய்விட்ட நிலை. ஆனால், கர்த்தர் சொன்னது நடந்தது. ஆம், அவளிடம் அந்த கல்லூரி வேண்டாம், வேறு ஏதாவது ஒரு கல்லூரிக்கு சென்று படிக்கலாமே என்று யோசனையாக சொன்னோம். அவளும், எங்களின் விருப்பத்திற்காக வேறு ஒரு கல்லூரிக்கு விண்ணப்பித்தபோது, கர்த்தர் அதை ஆச்சரியகரமாய் வாய்க்கச் செய்தார். இப்போது அவள் படித்து முடித்துவிட்டாள். முந்தின கல்லூரியைவிட நல்ல தரமான கல்லூரியில் படிக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் செய்ய நினைத்தது ஒருநாளும் தடைபடாது. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்!

- காத்தரீன் இன்பராஜ்
ஆற்காடு





# ஜீவ பலி

**ஏஞ்ஜலின் தீப்தி**

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12:1).**

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதுபோல, ஆராதனையின் உச்ச வடிவம் அல்லது தியாகமாக நாம் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்க வேண்டியது நம்மையே. நாம் ஜீவ பலியாக மாறும்பொழுது, நாம் செய்வது என்னவென்றால், நாம் முன்பு யோசித்ததுபோல, நடந்து கொண்டதுபோல, பேசினதுபோல இல்லாதபடி மாறுகிறோம். நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் இயேசு கிறிஸ்து எப்படி இருக்க விருப்பப்படுகிறாரோ அப்படிப்பட்ட மாற்றம் உண்டாக ஆரம்பிக்கிறது. அவரைப்போல மேலும் மேலும் நம்மை உருமாற வைக்கிறார். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபேசியர் 2:3).

நியாயப்பிரமாணம் இல்லாமல் நாம் விரும்பி செய்கிறவைகள் சரியா? தவறா? என்று அறிய முடியாது. முதலாவது உடன்படிக்கை, மோசேயின் காலகட்டத்தில் கொண்டு வரப்பட்டது. மேலும், இந்த நியாயப் பிரமாணத்தினால் பாவத்தைப் பற்றிய அறிவு வந்தது. ஒரு மனிதனாலும் இந்த நியாயப் பிரமாணத்திற்குத் தேவையானவைகளை நிறைவேற்ற முடியவில்லை. அதினால் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் பாவத்தைக் குறித்ததான நினைப்பூட்டுதல் இருந்து கொண்டிருந்தது. இது வருடா வருடம் தொடர்ந்து கொண்டிருந்தது. நம் எல்லோருக்காகவும் இயேசு கிறிஸ்து இந்த நியாயப் பிரமாணத்தை பூர்த்தி செய்து, அதை ஒன்றுமில்லாததாக்கினார். இயேசு கிறிஸ்துவுடனான புதிய உடன்படிக்கையின்கீழ் நாம் மனந்திரும்பி இயேசு கிறிஸ்து மூலமாக

பாவ மன்னிப்பை பெற்றிருக்கிறோம். அதினால், நமக்கு எதிராக பாவமோ பாவத்தின் நினைப்பூட்டுதலோ கிடையாது. அதற்குப் பதிலாக, இப்பொழுது நியாயப் பிரமாணம் நம் இருதயத்தில் பதிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது எல்லாமே நம் ஆவிக்குள் நடக்கின்றது. பரிசுத்த ஆவி, நமது மனசாட்சியை உணர்வுள்ளதாக்குகின்றது. மேலும், கர்த்தர் நாம் எதைச் செய்யவும், செய்யாமலும் இருக்க விரும்புகிறார் என்பதை பரிசுத்த ஆவியானவர் நம்மை அறிய வைக்கிறார்.

**அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோட பண்ணப்போகிற உடன்படிக்கையாவது: நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமியா 31:33).

ஒருமுறை நம்மை நாமே அர்ப்பணிப்போமானால், கர்த்தருடைய பிரசன்னத்தை நம் வாழ்வில் அதிகமாக உணர ஆரம்பிப்போம். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கும், உணர்த்துதலுக்கும் நாம் அதிகமாக உணர்வுள்ளவர்களாவோம். நாம் ஜெபத்தோடு, கர்த்தருடைய சித்தத்தின்படி முடிவுகளை எடுக்க ஆரம்பிப்போம். காரியங்களை முற்றிலும் புதிய கோணத்திலே பார்க்க ஆரம்பிப்போம்; கர்த்தர் எப்படி பார்ப்பாரோ அப்படி எல்லாவற்றையும் பார்க்க ஆரம்பிப்போம். முன்னர் எந்தக் காரியங்களெல்லாம் முக்கியமானதாக, கனமுள்ளதாக இருந்ததோ அவையெல்லாம் திடீரென்று ஒன்றுமில்லாதவைகளாக மாறிப்போகும். இது எதினாலென்றால், நமது ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டதினாலேயே. மேலும் நாம் ஆவிக்குரிய காரியங்களை புரிந்து கொள்வதினாலே. இந்த அனுபவம் மறுபடி நாம் பிறந்ததற்கு ஒத்த அனுபவமாகும். சிலுவையைப்பற்றிய உபதேசம் நம் இருதயத்தை வந்தடைந்தபோது, நாம் அவிசுவாசத்தில் இருந்தோம். அது நமக்கு பைத்தியமாக தோன்றியது.

**மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்** (1 கொரிந்தியர் 2:11,12). கர்த்தர் நமக்குள் வாசம் செய்யும் அவருடைய ஆவியின் மூலம் அவருடைய தெய்வீக ஞானத்தை நமக்குள் பதித்து வைக்கிறார். அப்படி பதித்து வைத்ததை அவர் மூலமாகவே நாம் வியாக்கியானம் செய்யவும், புரிந்து கொள்ளவும் முடியும். இது நமது மகிமைக்காக இந்த உலகத்திற்கு முன்பாக கர்த்தரால் உண்டான மறைந்துள்ள ஞானமாகும்.

**நியாயப் பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்** (ரோமர் 2:13).

நம்மை நாமே கர்த்தருக்கு அர்ப்பணித்திருப்பதினால், நாம் எதை செய்யவேண்டும் என்பதை அறியவும், அவரைக் கூப்பிடும்போதெல்லாம் நமக்கு வழிகளை தெரிவிக்கவும் செய்கிறார். இதற்குப் பிற்பாடு, அவர் என்ன



சொல்கிறாரோ அதைச் செய்வதே நம்முடைய பங்காகும். அது எப்படிப்பட்ட காரியமாக இருந்தாலும் கர்த்தருடைய நோக்கத்தை நிறைவேற்ற நம் பங்கு கட்டாயமாகச் செய்யவேண்டும். இல்லையென்றால், அவருடைய மகிமையில் நமக்கு பங்கில்லாமல் போகும். **இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்** (2 கொரிந்தியர் 2:15).

நாம் ஜீவ பலியாக மாறும்போது, நமது வாழ்க்கை இயேசு கிறிஸ்துவிற்கு எடுத்துக்காட்டாகிறது. புற ஜாதிகள் இயேசு கிறிஸ்து நமக்குள் கிரியை செய்வதை பார்க்க ஆரம்பிக்கிறார்கள், நாம் சாட்சிகளாக மாறுகிறோம். இயேசு கிறிஸ்து சொல்கிறார், கோதுமை மணியானது தரையில் விழுந்து செத்து மடியாமல் அது அதிக பலனைக் கொடுக்கமுடியாது என்று. எல்லா அதிகாரத்திற்கும், துரைத்தனத்திற்கும், எல்லா காலங்களிலுமுள்ள எல்லா நாமத்திற்கும் மேலாக உட்கார, அவர் சிலுவை வழியே செல்ல வேண்டியிருந்தது. அதேபோல, நம்மை நாமே ஜீவ பலியாக அர்ப்பணிக்காமல், ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் சேர்ப்பதற்கு வேறு வழியில்லை.

**கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?**

**உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரக் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே** (சங்கீதம் 15:1,2).

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?** (1 கொரிந்தியர் 3:16). நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள் (ரோமர் 6:13). இப்போது நாம் பரிசுத்தமாக மாறியிருக்கிறோம். கர்த்தரே நமக்குள்ளே வாசம் செய்கிறார். மேலும் நம்மோடு ஐக்கியமாயிருக்கிறார். நாம் ஒரு விசுவாசி எதை அடைய வேண்டுமோ அதை நிறைவேற்றிவிட்டோம் - உப்பாக, வெளிச்சமாக இந்த உலகத்திற்கு இருக்கிறோம்.

**இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.**

**உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்.**

**உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்து வரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும் பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்.**

**உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய் பாழாகும்.**

**உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்** (ஏசாயா 60:2,3,4,12,15).